47

# “நாங்கள் அவரது மகிமையைக் கண்டோம்”

## மத். 17:1–8; மாற். 9:2–8; லூக். 9:28–36, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*மூன்று ஆண்டுகளாக இயேசுவுடன் நடந்த அப்போஸ்தலர்களில் ஒருவராயிருந்ததுபோல் நினைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் கண்டிருக்கக் கூடிய அற்புதமான காட்சிகள் யாவற்றையும் ஆழ்ந்து சிந்தியுங்கள்; ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல், இயேசு தண்ணீர்மீது நடத்தல், புயலை அமர்த்துதல், மரித்தவர்களை உயிர்ப்பித்தல். இப்போது உங்களையே நீங்கள், “நான் கண்ட எல்லாவற்றிலும் என் மனதில் ஆழப்பதிந்தது எது?” என்று கேட்டுக்கொள்ளுங்கள். நீங்கள் அந்தக் கேள்விக்கு எவ்வாறு பதில் அளிப்பீர்கள் என்று எனக்குத் தெரியாது, ஆனால் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியானது அதைக் கண்ட அப்போஸ்தலர்களின் மனதில் அழிக்க இயலாத அளவுக்கு ஆழப்பதிந்திருந்தது பற்றி நான் அறிவேன்: மறுரூபம் ஆகுதல். அங்கிருந்தவர்களில் ஒருவர் பிற்பாடு, பின்வருமாறு கூறினார்:*

> *... அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றபோது, அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம் (2 பேது. 1:16-18).*

*அங்கிருந்த இன்னொருவர் பின்வருமாறு எழுதினார்:*

> *ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது (யோவா. 1:1).*
>
> *அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் காண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய*

*மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது (யோவா. 1:14).*

*இந்த எழுத்தாளர் அநேகமாக, மறுரூபத்திலும் அதிகமானவற்றைத் தமது சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம் (யோவா. 2:11ஐக் காணவும்), ஆனால் நினைவுகூரத்தக்க அந்த நிகழ்ச்சி "அவருடைய மகிமையைக் கண்டோம்" என்ற கூற்றில் நிச்சயமாகவே உள்ளடக்கப்பட்டிருந்தது (லூக். 9:31, 32ஐக் காணவும்).*

*மறுரூபமாகுதலைப் பற்றி நாம் படிக்கையில்,[1] மத்தேயு 17 நமது அடிப்படை வேதபாடப் பகுதியாக இருக்கும்; ஆனால் நாம் துணை விவரங்களுக்காக மாற்கு 9 மற்றும் லூக்கா 9 ஆகியவற்றிற்குச் செல்லுவோம். இந்த எடுத்துரைப்பானது நாம் ஒவ்வொருவரும் "அவரது மகிமையைக் காண்பதற்கு" உதவி செய்யட்டும்.*

## *முக்கியமான நிகழ்ச்சி*
## *(மத். 17:1, 2; மாற். 9:2, 3; லூக். 9:28, 29)*

*நமது வேத பாடப் பகுதி, "ஆறு நாளைக்குப் பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனான யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போய்" என்று தொடங்குகிறது (மத். 17:1).[2] ஆறு நாளைக்கு முன்பு என்ன நடந்திருந்தது?*

*ஏறக்குறைய ஒரு வாரத்திற்கு முன்பு, பேதுரு நல்ல அறிக்கையை ஏற்படுத்தியிருந்தார், மற்றும் கிறிஸ்து தமது சபையைக் கட்டுவதாக வாக்குறுதி அளித்திருந்தார் (மத். 16:16, 18).[3] பின்பு அவர், அந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தாம் மரிக்க வேண்டும் என்பதையும் வெளிப்படுத்தியிருந்தார்: "அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப் போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள்பட்டு, கொலையுண்டு, ... என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்" (மத். 16:21). அவருடைய சீஷர்களின் சிந்தையில் இருந்தது போல் ஒரு பூமிக்குரிய இராஜ்யத்தை நிலைநாட்டுவதற்காக எருசலேமுக்குச் செல்லுவதற்குப் பதில், அவர் மரிப்பதற்காக எருசலேமுக்குச் செல்லவிருந்தார்.*

*கிறிஸ்துவின் வார்த்தைகளைச் சீஷர்கள் புரிந்துகொள்ளவில்லை; மேசியாவின் மரணம் என்பது இராஜ்யம் பற்றிய அவர்களின் கருத்திற்குள் பொருந்திவரவில்லை. "அப்பொழுது பேதுரு அவரைத் தனியே அழைத்துக் கொண்டு போய்: 'ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை' என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்" (மத். 16:22). கிறிஸ்து பேதுருவையும் பின்பு எல்லா அப்போஸ்தலர்களையும் கண்டித்தார் (மத். 16:23-27; மேலும் மாற். 8:38; லூக். 9:26 ஆகியவற்றையும் காணவும்).*

*இயேசுவுக்கும் அவரது பின்பற்றாளர்களுக்கும் இடையில் அநேகமாக - ஆறு நீண்ட நாட்களுக்கு - நிலவியிருந்திருக்கக் கூடிய மன இறுக்கத்தைக்*

கற்பனை செய்து பாருங்கள். அந்த நாட்களில் நடந்தவற்றைப் பற்றிய பதிவு எதுவும் இருப்பதில்லை. கடைசியில், ஆறு நாட்களுக்குப் பின்பு, இயேசு தமது அப்போஸ்தலர்களில், வெளிப்படையாகப் பேசியிருந்த பேதுரு உட்பட மூவரைத் தேர்ந்துகொண்டு "உயர்ந்த மலையின்மேல் போனார்."

இந்த மூன்று பேரை இயேசு கூட்டிச் சென்றது ஏன் என்று நமக்குக் கூறப்படவில்லை, ஆனால் பல நிகழ்ச்சிகளில் அவர் இவர்களை மற்ற அப்போஸ்தலர்களிலிருந்து பிரித்திருந்தார் (மாற். 5:37; 9:2; 14:33). ஒருவேளை அவர்கள் எதிர்காலத்தில் கொண்டிருக்க வேண்டியிருந்த தேவைகளை அவர் முன்னதாக எதிர்நோக்கியிருந்திருக்கலாம்.[4] ஒருவேளை அவர், இந்த மூவர் மூலம் மற்ற ஒன்பது பேர்களை மிகச் சிறந்த முறையில் அடையலாம் என்று நினைத்திருக்கலாம். நம்மைப் போல் இயேசுவுக்கும் அவரது மனிதத்துவத்தில் விசேஷித்த நண்பர்கள் தேவைப்பட்டிருக்கக் கூடிய சாத்தியக்கூறும் கூட உள்ளது. அவர்களில் ஒருவராயிருந்த யோவான் "இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன்" என்று அறியப்படுகின்றார் (யோவா. 21:20; 13:23; 19:26; 20:2 ஆகியவற்றையும் காணவும்).

அவர்கள் எந்த மலையின்மீது ஏறிச் சென்றார்கள் என்றும் நமக்குக் கூறப்படுவதில்லை.[5] இது கலிலேயாவில் உள்ள தாபோர் மலை என்று, ஏவுதல் பெற்றிராத ஒரு பாரம்பரியம் கூறுகிறது, ஆனால் அநேகமாக பேதுரு நல்ல அறிக்கை செய்த இடத்திற்கு அருகில் உள்ள[6] எர்மோன் மலையாக இருந்தது. எர்மோன் மலைதான் பலஸ்தீனத்தில் உள்ள மலைகளிலேயே மிக உயரமான மலையாகும்; அதன் "பனிமூடிய சிகரங்கள், பள்ளத்தாக்கின் தரைப்பகுதியில் இருந்து சுமார் பத்தாயிரம் அடிகள் உயரத்திற்கு" எழும்பி நிற்கின்றன.[7]

மறுரூபமடைவதற்காக அல்ல, ஆனால் தமது பிதாவுடன் பேசுதல் என்பதே இயேசு மலையின்மீது ஏறிச் சென்றதற்கான காரணமாக இருந்தது. லூக்கா, "அவர் பேதுருவையும் யோவானையும் யாக்கோபையும் கூட்டிக் கொண்டு, ஜெபம் பண்ணுகிறதற்கு ஒரு மலையின்மேல் ஏறினார்" என்று எழுதினார் (லூக். 9:28). அவர் தமது அப்போஸ்தலர்களின் ஜெபவாழ்வை மேம்படுத்துவதற்கு உதவ விரும்பியிருக்கலாம் - ஆனால் அடிக்கடி நடந்ததுபோல, அவர்கள் இந்த ஜெபஆராதனையின் போது[ம்] உறங்கச் சென்றார்கள் (லூக். 9:32; மத். 26:40, 43, 45).

பின்பு, "அவர் ஜெபம்பண்ணுகையில்" திடீரென்று "அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்" (லூக். 9:29அ; மத். 17:2அ). "மறுரூபமாகுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையில் இருந்துதான் நாம் அடிப்படை மாற்றத்தைச் சுட்டிக்காட்டும் "metamorphosis" (உருமாற்றம்) என்ற வார்த்தையை பெறுகின்றோம்.[8] மறுரூபமாகுதலின் மாண்பை வார்த்தைகள் விளக்கியுரைக்க இயலாது. சுவிசேஷ விவரங்களின் எழுத்தாளர்கள் ஒப்பீட்டுச் சொற்றொடர்களைப் பயன்படுத்துவதன் மூலம் இதன் செயல்விளைவை விவரிக்க முயற்சி செய்தார்கள்.

> அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப் போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல

*வெண்மையாயிற்று (மத். 17:2).*

*அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல் பூமியிலே எந்த வண்ணானும் வெளுக்கக்கூடாத வெண்மையாய்ப் பிரகாசித்தது[9] (மாற். 9:3).*

*... அவருடைய முகரூபம் மாறிற்று, அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது (லூக். 9:29).*

என்ன நடந்தது என்பதைப் பிரதிபலிக்க இங்கு சாத்தியமான ஒரு வழி வகை உள்ளது: இயேசு தேவமனிதராக இருந்தார் (மத். 1:23), ஆனால் அவர் பூமியில் சஞ்சரிக்கையில், பெரும்பாலான மக்கள் அவருடைய மனிதத் துவத்தை மட்டுமே கண்டார்கள். ஆயினும் இந்த விசேஷித்த நிகழ்ச்சியில், அவரது தேவத்துவம் அவரது மனிதத்துவத்தின் மூலம் பிரகாசிக்க அனு மதிக்கப்பட்டது. பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர் ஒரு சிலருக்கு மாத்திரமே அளிக்கப்பட்டிருந்த அவரது தெய்வீகத்தின் சிறு காட்சியைப் பெற்றுக்கொண்டார்கள்.[10]

## மனதில் ஆழப்பதியும் ஆர்வநோக்கம் (மத். 17:3-8; மாற். 9:4-8; லூக். 9:30-36)

நமது படிப்பு வளர்நிலையடைகையில், நாம் "மறுரூபமாகுதலின் நோக்கம் என்னவாக இருந்தது?" என்று கேட்க விரும்புகின்றோம். நடந்திருந்த இந்த தனிச்சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சிக்குச் சாத்தியமான நான்கு காரணங்களை நான் கருத்தாகத் தெரிவிக்க அனுமதியுங்கள்.

### மனிதத்துவம் முடிசூட்டப்பட்டது

கிறிஸ்துவின் வாழ்வில் அவ்வப்போது, கடந்த காலத்தை முடிசூட்டி எதிர்காலத்திற்கு வழியை ஆயத்தப்படுத்திய நாடக பாணியான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவர் ஞானஸ்நானம் பெற்றது அவ்விதமான ஒரு நிகழ்ச்சி யாக இருந்தது. அந்த வேளையில் தேவன், இயேசுவின் முப்பதாண்டு காலத் தயாரிப்பை தாம் அங்கீகரித்ததை அறிவித்தார், மற்றும் கிறிஸ்துவின் மூன்றரை ஆண்டுகள் கால வெளியரங்கமான ஊழியத்திற்கு அவரைத் தயாரிப்பதற்காக அவர்மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்தார் (மத். 3:16, 17). மறுரூபமாகுதல் என்பது இன்னொரு உச்சகட்ட வேளையாக இருந்தது. அந்த வேளையில் தேவன், இயேசுவின் தயாரிப்பின் ஆண்டுகளின் மீது மட்டுமின்றி அவரது ஊழியத்தின் ஆண்டுகளின்மீதும் தமது "அங்கீகாரத்தின் முத்திரையை" இட்டார் (மத். 17:5).

தேவன் இந்த பூமியில் மனிதனை வைத்தபோது அவனுக்காக அவர் விரும்பிய வண்ணமாகவே கிறிஸ்து இருந்தார். மக்கள் பாவம் செய்திருந் தார்கள் (ஆதி. 3:5; ரோமர் 3:23), ஆனால் இயேசு பாவம் எதுவும் செய்திருந்தது இல்லை (எபி. 4:15). மறுரூபமாகியபோது, கிறிஸ்து தாம் முன்பு இருந்த நிலையிலேயே மிகச் சரியாக - பூமிக்கு அவரது வருகைக்கான

*வேறு காரணம் எதுவும் இராதிருந்தால் - பரிசுத்த தேவனுடைய பிரசன்னத் திற்குத் திரும்பச் சென்றிருக்க முடியும். மறுரூபத்திற்கான இரண்டாவது நோக்கத்திற்கு வழிநடத்திய இன்னொரு காரணம் இருந்தது.*

***“யாத்திரை” உறுதிப்படுத்தப்பட்டது***

*லூக்கா, “பேதுருவும் அவனோடிருந்தவர்களும் நித்திரை மயக்கமா யிருந்தார்கள். ஆகிலும் அவர்கள் விழித்து அவருடைய மகிமையை … கண்டார்கள்” (லூக். 9:32) என்று எழுதினார். பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர் கனவு காணவில்லை என்பதை, நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்று எழுத்தாளர் விரும்பினார்; அவர்கள் இயேசுவின் தோற்றத் தினால் திகைப்புற்றபோது நன்றாக விழித்துக் கொண்டிருந்தார்கள்.*

*விரைவிலேயே அவர்கள் தங்களை இன்னும் அதிகமாகத் திகைக்க வைத்தவைகளைக் கொண்டிருந்தார்கள்: “அன்றியும் மோசே எலியா[11] என்னும் இரண்டுபேரும் மகிமையோடே காணப்பட்டு, அவருடனே [கிறிஸ்துவுடனே] சம்பாஷணைபண்ணி” (லூக். 9:30).[12] மோசே மற்றும் எலியா ஆகியோர் யூதத்துவ விசுவாசத்தின் மாபெரும் நாயகர்களில் இருவராக இருந்தார்கள் (எபி. 11:23-29; யாக். 5:17). பேதுரு யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர் தங்களின் தந்தையார்களின் மடியில் இருந்த போது அவர்களை[மோசே, எலியா ஆகியோரை]ப் பற்றிய வரலாறுகளைக் கேள்விப்பட்டிருப்பார்கள். அவர்களின் பெயர்கள் ரபீக்களால் மிக உயர்வாகப் புகழப்பட்டிருப்பதை இவர்கள் கேள்விப்பட்டிருப்பார்கள். மோசே மாபெரும் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தவராக இருந்தார்; எலியா நியாயப்பிரமாணத்திற்குத் திரும்பும்படி மக்களை அழைத்தார்.[13] மறுரூப மலையில் ஆண்டவருடன் நிற்பதற்கான சிலாக்கியத்தை இவ்விருவரும் பெற்றது ஏன் என்று நமக்குக் கூறப்படவில்லை. ஒருவேளை இவர்கள் இருவரும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களில் மேசியா வுடன் இணைக்கப்பட்டிருந்ததே இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம் (உபா. 18:15; மல். 4:5, 6).[14]*

*இயேசு, மோசே மற்றும் எலியா ஆகிய மூவரும் பொதுவான தன்மை களை அதிகமாய்க் கொண்டிருந்தார்கள்; அவர்கள் பல்வேறு தலைப்புகள் பற்றிக் கலந்துரையாடியிருக்கலாம். மோசே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் நுழைய அனுமதிக்கப்படாதிருந்தார் (எண். 20:12), எலியா, கலிலேயாவின் புல்லாந்தரைச் சமவெளிகளில் நடந்திருந்து பல நூற்றாண்டு கள் ஆகியிருந்தன; அவர்கள் இயேசு அந்த நாட்டினூடே செய்த பயணங் கள் பற்றிப் பேசுவதில் மகிழ்வடைந்திருக்கலாம். இந்த மூவருமே தலைமைத்துவத்தின் சோதனைகளுக்கு உட்பட்டவர்களாக அறியப்பட்டிருந் தார்கள்; அவர்கள் மிகவும் அடிப்படையான சத்தியங்களைக் கூட செய்தித்தொடர்பு செய்ய முயற்சித்தலில், எவ்வளவு சக்தி செலவிட வேண் டியதாக இருந்தது என்று கலந்துரையாடியிருக்க முடியும்.[15] ஆயினும் அவர்களின் உரையாடல் இந்த அல்லது இதுபோன்ற விஷயங்களாக இருக்கவில்லை.*

*லூக்காவின் சுவிசேஷ விவரப்படி, “அவர் எருசலேமிலே நிறைவேற்றப்*

*போகிற அவருடைய மரணத்தை*[departure[16]]*க் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்" (லூக். 9:31). "யாத்திரை"[17] என்பதற்கான கிரேக்க வார்த்தை* "departure" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "யாத்திரை" என்பதற்கான கிரேக்க வார்த்தை "சாலை" அல்லது "வழி" (odos) என்ற கிரேக்க வார்த்தையுடன் "வெளியே" (ek அல்லது ex) என்ற முன்னிடைச் சொல் இணைந்த கூட்டு வார்த்தையாக உள்ளது; இது "வெளியே செல்லும் வழி'' என்ற நேரடியான அர்த்தம் கொண்டுள்ளது. கதவுகளின்மீது "வெளியே செல்லும் வழி" என்றுள்ள அறிவிப்புப் பலகையை நினைத்துப் பாருங்கள். எகிப்திலிருந்து புறப்பட்ட யாத்திரையை நினைத்துப் பாருங்கள்: இஸ்ரவேல் மக்கள் அந்த நாட்டை விட்டுப் புறப்பட்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டை நோக்கிப் பயணம் சென்று கொண்டிருந்தார்கள். லூக்கா 9ல் "யாத்திரை" என்ற வார்த்தை, மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் ஆண்டவரின் பரத்திற்கேறுதல் ஆகியவற்றைச் சுற்றிச் சுழலுகிறது. இது கிறிஸ்து இந்த வாழ்விலிருந்தும் நிறைவாக இந்த உலகத்திலிருந்தும் பிரிந்து செல்லவிருந்ததை வரைபட மாதிரியாகப் பேசுகிறது.*

*இயேசுவுக்கு வரவிருந்த சிலுவை மரணமானது மோசே மற்றும் எலியா ஆகியோரின் சிந்தைகளை நிறைத்திருந்தது எதினால் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? அவர்களின் காரணம், தொழில்முறை சார்ந்ததாக இருந்திருக்கலாம்: அவர்களின் கடின உழைப்பின் ஆண்டுகள் இந்த நிகழ்ச்சியையே சுட்டிக் காண்பித்திருந்தன. மனிதர்களைக் கிறிஸ்துவினிடத்தில் அழைத்து வருதல் என்பதே மோசேயினால் தரப்பட்ட நியாயப் பிரமாணத்தின் நோக்கமாக இருந்தது (கலா. 3:16, 19, 24, 25). மேசியா வரக்கூடிய மக்களினத்தைத் தயார் செய்வதில் உழைத்த தீர்க்கதரிசிகளில் ஒருவராக எலியா இருந்தார். தீர்க்கதரிசிகளின் கூற்றுப்படி, கிறிஸ்து/ மேசியா வந்தபோது, அவர் மக்களுக்காக மரிக்க வேண்டியிருந்தது (ஏசா. 53:4-6).*

*ஆயினும், இயேசுவின் மரணத்தின்மீது மோசேயும் எலியாவும் கொண்டிருந்த ஆர்வத்திற்குத் தனிப்பட்ட காரணம் ஒன்றை அவர்கள் கொண்டிருக்கச் சாத்தியம் உண்டு: அவர்களின் பாவங்களுக்காக அவர் மரிக்காதிருந்தால், அவர்கள் பரலோகம் செல்ல முடியாதிருந்தது! மக்கள் மன்னிக்கப்படுதலைப் பற்றிப் பழைய ஏற்பாடு பேசுகிறது, ஆனால் அது ஒரு தற்கால மன்னித்தலாக, கிறிஸ்துவின் நிறைவான பலியை முன்னெதிர் பார்த்ததாக இருந்தது.[18] எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், இயேசு "முதலாம் உடன்படிக்கையின் [பழைய ஏற்பாட்டின்] காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்து கொள்வதற்காக, புது உடன்படிக்கையின் [புதிய ஏற்பாட்டின்] மத்தியஸ்தராயிருக்கிறார்" (எபி. 9:15) என்று எழுதினார். முன்னோடிப் பிரசங்கியார்கள், "இயேசுவின் இரத்தம் பின்னோக்கியும் முன்னோக்கியும் பாய்ந்தது" என்று கூற விரும்பினார்கள்.*

*இவ்விதமாக மோசேயும் எலியாவும் கிறிஸ்துவின் மரணத்தின்மீது*

*ஆர்வத்தை நிலைநாட்டிக் கொண்டிருந்தார்கள். இயேசு தாம் இருந்த வகையிலேயே மிகச் சரியாகப் பரலோகத்திற்குத் திரும்பியிருக்கக் கூடும் என்று நாம் குறிப்பிட்டிருந்தோம் - ஆனால், அவர் அவ்வாறு செய்திருந்தால், அவர் ஒருவரே பரலோகத்தில் மனித மாம்சத்தில் வாசம் பண்ணியிருந் தவராக இருந்திருப்பார். மோசே பரலோகம் செல்லக் கூடுவதற்கு முன்பு அவர் [இயேசு] மரிக்க வேண்டியிருந்தது! எலியா பரலோகம் செல்லக் கூடுவதற்கு முன்பு அவர் [இயேசு] மரிக்க வேண்டியிருந்தது! ஆகையால் இந்தக் கலந்துரையாடலானது பழைய ஏற்பாட்டில் தகுதியுடைய இருவருக்கும் மிகவும் ஆர்வமுடையதாக இருந்தது.*

*இந்தக் கருத்துப் பரிமாற்றம் ஆண்டவருக்கும் முக்கியமானதாக இருந்தது. அவர் சிலுவையினிடம் செல்லுவதில், அவரது சீஷர்கள் அவரை ஊக்கமிழக்கச் செய்ய முயற்சித்திருந்தார்கள் (மத். 16:22). மோசேயும் எலியாவும், அவர் மனிதரின் இரட்சிப்புக்கான தேவனுடைய திட்டத்தைச் செயல்படுத்துவதில் இருந்து அவரை எதுவும் விலகச் செய்யாதபடி அவரை உற்சாகப்படுத்தினார்கள் என்பது சந்தேகமற்றது. இவ்விதமாக, மறுரூபமாகு தல் என்பது கடந்த காலத்திற்கு முடிசூட்டுவதாக இருந்ததோடு, எதிர் காலத்திற்கு - சிலுவையில் அறையப்படுதலுக்கு - இயேசுவை ஆயத்தப் படுத்தவும் உதவிற்று.*

### *அதிகாரத்துவம் விளக்கப்பட்டது*

*மறுரூபத்திற்கான அந்த இரண்டு அடிப்படை நோக்கங்களுடன் கூடுதலாக, மற்ற காரணங்களும் குறிப்பிடப்பட வேண்டும். இயேசுவின் அதிகாரத்துவம் அந்த வேளையில் விளக்கப்பட்டது என்பது மூன்றாவது காரணமாக உள்ளது.*

*சீஷர்கள் தாங்கள் கண்ட காட்சியினால் பயம் அடைந்தார்கள் (மாற். 9:6) - ஆனால், பயத்துடனோ அல்லது பயமின்றியோ, பேதுரு எப்போதும் எதையாவது கூறுபவராக எண்ணப்பட்டு இருக்கின்றார்.*[19] *அவர் பின்வருமாறு பேசினார்: "ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம்" (மத். 17:4). "பேதுரு தான் பேசுகிறது இன்னதென்று அறியாமல் இப்படிச் சொன்னான்" என்று மாற்கு கூறினார் (மாற். 9:6), அதே வேளையில் பேதுரு, "தான் சொல்லுகிறது இன்னதென்று அறியாமல் சொன்னான்" என்று லூக்கா பதிவுசெய்தார் (லூக். 9:33). பேதுரு என்ன கூறுவதென்று அறியாதிருந்தார்; மற்றும் அவர் அதைக் கூறிய பின்பு[ம்] தான் கூறியிருந்ததென்ன என்று அறியாதிருந்தார்!*

*பேதுரு இடத்தைக் குறிப்பிட்டபோது, தான் கூறுவது இன்னதென்று அறியாதிருந்தார்: "ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; ... இங்கே மூன்று கூடாரங்களைப் போடுவோம்." உண்மையில் இந்த அப்போஸ்தலர் இயேசுவினிடத்தில், "மேசியா என்ற வகையில் உம்மை நான் மிகச் சரியாகக் கண்ணோக்கிய வகையிதுவே! எனவே உமக்கு மரணம் காத்திருக்கும் இடமான எருசலேமுக்கு செல்லுவதை மறந்து விடுவீராக. உம்மைச் சுற்றி*

*மகிமை சூழ்ந்துள்ள மலையான இங்கேயே நாம் தங்கிவிடுவோம்" என்றே கூறினார். கிறிஸ்து அங்கேயே தங்கியிருந்திருந்தால், அவர் நமது பாவங் களுக்காக மரித்திருக்கமாட்டார் (1 கொரி. 15:3) என்பதையும் நாம் இழந்து போகப்படுவோம் (எபி. 9:22ஆ) என்பதையும் அவர் அறியாது இருந்தார்!*

*மற்றும், பேதுரு கரடுமுரடான வாழ்விடங்களைக்[20] கட்டியெழுப்பு வதாகத் தாம் முன்மொழிந்தபோது, தாம் கூறுவது இன்னதென்று அறியாதிருந்தார்: "உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம்."[21] பேதுரு, மோசேயையும் எலியாவையும் "அவர்களும் கிறிஸ்துவும் தங்குவதற்கு மூன்று கூடாரங்களை அல்லது மரக்கிளைகளைக் கொண்டு எழுப்பப்படும் தற்காலிக இல்லிடங்களைப் போடுதல் என்ற மிகச் சிறந்த ஊக்குவிப்பைத் தாம் அளிக்க முடிந்தாலும், அவர்களை அங்கிருக்கச் செய்வதற்கு ஒரு முயற்சியை மேற்கொள்ளாமல்" விட்டுவிட முடியாதிருந் தார் என்று J. W. மெக்கார்வீ அவர்கள் கருத்து தெரிவித்தார்.[22] இது எவ்வளவாகக் கருத்தற்றதாக இருந்தது என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: நார்களினால் அமைக்கப்படும் தற்காலிக இல்லிடங்கள் ஆவிக்குரிய ஜீவிகளுக்கு எவ்விதத்தில் சாத்தியமாகப் பயன்படும்?*

*விசேஷமாகப் பேதுரு, மோசேயையும் எலியாவையும் ஆண்டவருக்கு இணையாக வைத்தபோது தாம் கூறியது என்ன என்பதை அறியாதவராக இருந்தார்: "உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியா வுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம்." இன்றைய நாட்களிலும் பலர் இதே தவறைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் சிந்தைகளில் இயேசு, ஆவிக்குரிய மாபெரும் போதகர்கள் மற்றும் நடத்துனர்களில் ஒருவராகவே இருக்கின்றார்.[23] அவர்கள் இயேசு, முகம்மது, புத்தர் இன்னும் இது போன்றவர்களைக் கனப்படுத்துவதற்கு அதிகமான கூடாரங்களைப் போடுவதில் மிகவும் சந்தோஷம் அடைவார் கள். அவர்கள், பேதுருவின் ஆலோசனைக்குத் தேவனின் பதிலுரையைக் கேட்பது அவசியமாகிறது: "அவன் பேசுகையில், ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேசகுமாரன்; இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள் என்று அந்த மேகத்தி லிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று" (மத். 17:5).*

*தேவனுடைய வார்த்தைகள் ஒரு தெய்வீக அடையாளத்துவமாக இருந்தன: "இவர் என்னுடைய நேசகுமாரன்." இவைகள் தெய்வீக அங்கீகரிப்பைச் சுட்டிக் காண்பித்தன: "இவரில் பிரியமாயிருக்கிறேன்." இவைகள் ஒரு தெய்வீக ஆணையைக் கொண்டிருந்தன: "இவருக்குச் செவி கொடுங்கள்." வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "மோசேயைக் கவனிக்காதீர்கள்; எலியாவுக்குக் கவனமாய்ச் செவிகொடுக்காதீர்கள்; இயேசு கூறுவதை மட்டுமே கேளுங்கள்!"[24] இன்றைய நாட்களில் நாம், "தேவனுக்காக விசேஷமாய்ப் பேசுபவர் என்று உரிமைகோரும் வேறு எவர் கூறுவதையும் கேட்காதீர்கள்!" என்பதைச் சேர்த்துக் கொள்ள முடியும்.*

*அப்போஸ்தலர்கள் தயாரானார்கள்*

நான்காவது, மத்தேயு 17:5ல் தேவனுடைய வார்த்தைகள், அப்போஸ் தலர்களுக்கு விசேஷித்த தனிச்சிறப்பைக் கொண்டிருந்து இருக்க வேண்டும். அவர்கள் கிறிஸ்துவுக்கு வரவிருந்த மரணம் பற்றிய அவரது முன்னு ரைத்தலை எதிர்த்து நின்றுகொண்டிருந்தார்கள் (மத். 16:21, 22). சந்தர்ப்பப் பொருளில், பேதுருவுக்குத் தேவனுடைய வார்த்தைகள் "நீங்கள் புரிந்து கொள்ளாவிட்டாலும், நீங்கள் கருத்து வேறுபட்டாலும் இயேசு கூறுவதைக் கவனியுங்கள். *அவர்* மிகச் சிறப்பாக அறிகின்றார்" என்று குறிப்பிட்டன. நமக்குச் "சரியானதாகக் காணப்படுகிறது" என்ற வழியானது, உண்மையில் "மரண வழியாக" இருக்கலாம் (நீதி. 14:12; 16:25). நமது ஞானமானது எப்போதுமே எல்லைக்குட்பட்டதாக உள்ளது; நாம் "தேவனுடைய ஞானத்தைச்" சார்ந்திருக்கக் கற்றுக் கொள்வது அவசியமானதாக உள்ளது (எபே. 3:10).

மேகத்திலிருந்து அந்தக் குரல் வந்தபோது, சீஷர்கள் "முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள்" (மத். 17:6). இயேசு அவர்களிடத்தில் வந்து, அவர்களைத் தொட்டு, "எழுந்திருங்கள், பயப்படாதேயுங்கள்" என்று கூறினார் (மத். 17:7). அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில், "இயேசுவைத் தவிர வேறொருவரையும் காணவில்லை" (மத். 17:8).

நடந்த விஷயத்தின் எல்லா மறைபொருள்களையும் அப்போஸ்தலர்கள் புரிந்துகொண்டிருக்கவில்லை, ஆனால் அவர்கள் இயேசுவின் தெய்வீகத்து வத்தைக் கண்டிருந்தார்கள். இயேசு எருசலேமில் மரிக்க வேண்டும் என்ற உண்மையை மோசேயும் எலியாவும் உறுதிப்படுத்தியிருந்ததை அவர்கள் கேட்டிருந்தார்கள். பிற்பாடு பரிசுத்த ஆவியானவர் எல்லாவற்றையும் அவர்களுக்கு நினைப்பூட்டுவார் (யோவா. 14:26); பின்பு அந்தப் புதிரின் எல்லாத் துண்டுகளும் ஒன்றாய்ப் பொருந்தும்.[25] அதே வேளையில், வரவிருந்தவற்றிற்கு அவர்கள் ஏதோ ஒரு வகையில் குறைந்தபட்சமாகத் தயார் செய்யப்பட்டிருந்தனர்.

## முடிவுரை

அந்த மலையின்மீது மகிமைப்படுத்தப்பட்ட ஆண்டவரைக் காணுதல் என்பது உணர்வெழுச்சியுள்ளதாக இருந்திருக்காதா? நாம் ஒருக்காலும் அந்த அனுபவத்தைக் கொண்டிருக்கப் போவதில்லை; ஆனால், நாம் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் இருப்போமென்றால், ஒரு நாளிலே நாம் அவரது மகிமையில் அவரைக் *காண்போம்*! "... அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போம், ... என்று அறிந்திருக்கிறோம்" (1 யோவா. 3:2). நாம் ஒரு நாளிலே - பரலோகத்தில் - மோசேயையும் எலியாவையும் கூடக் காண முடியும்!

நாம் அவரை, அவரை மட்டுமே கவனித்துக் கேட்க மனவிருப்பமாய் இருக்கின்றோமா அல்லவா என்பதே கேள்வியாக உள்ளது. தேவனுடைய பின்வரும் வார்த்தைகள் உங்கள் காதுகளில் எப்போதும் ரீங்காரமிடட்டும்: "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்,

*இவருக்குச் செவிகொடுங்கள்!" (மத். 17:5ஆ). நீங்கள் விசுவாசிக்கும்படி அவர் கூறும்போது அவருக்கு செவிகொடுங்கள் (யோவா. 3:16; 8:24). நீங்கள் மனந்திரும்பும்படி அவர் கூறும்போது அவருக்கு செவிகொடுங்கள் (லூக். 13:3). நீங்கள் அவரை அறிக்கையிடும்படி அவர் கூறும்போது அவருக்கு செவிகொடுங்கள் (மத். 10:32, 33). நீங்கள் ஞானஸ்நானம் பெறும்படி அவர் கூறும்போது அவருக்கு செவிகொடுங்கள் (மாற். 16:15, 16). நீங்கள் ஒவ்வொரு நாளும் கிறிஸ்தவ வாழ்வை வாழும்படி அவர் கூறும்போது அவருக்கு செவிகொடுங்கள் (லூக். 9:23). அவருக்கு செவிகொடுத்து அவருடைய சித்தத்தின்படி செய்யுங்கள் - இன்றே செய்யுங்கள்!*

---

*குறிப்புகள்*

[1]G. Campbell Morgan, *The Crises of the Christ* (New York: Fleming H. Revell Co., 1936), 215-67 *என்ற புத்தகமானது இந்தப் பிரசங்கத்தின் பிரதான ஆதாரமூலமாக இருந்தது. மறுரூபமாகுதல் பற்றி மார்கன் அவர்கள் மூன்று அத்தியாயங்களை உள்ளடக்கினார். [2]மாற்குவும் கூட "ஆறுநாளைக்குப் பின்பு" என்று கூறுகின்றார் (மாற். 9:2), ஆனால் லூக்கா "இந்த வார்த்தைகளை அவர் சொல்லி ஏறக்குறைய எட்டு நாளான பின்பு" என்று கூறுகின்றார் (லூக். 9:28). மத்தேயுவும் மாற்குவும் இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் இடையில் இருந்த நாட்களை எண்ணியிருக்கையில், லூக்கா இவ்விரண்டு நிகழ்ச்சிகளும் நடந்த நாட்களையும் உள்ளடக்கினார். இன்றைய நாட்களில் உலகில் நான் வாழும் பகுதியில் நாங்கள், "ஒரு வாரத்திற்குப் பின்பு" என்று கூறுவதுண்டு. சுவிசேஷ விவரங்களின் எழுத்தாளர்கள் ஒருவர் மற்றவரிடமிருந்து அப்படியே பார்த்து எழுதவில்லை என்பதற்கு ஆதாரம் வேண்டுமென்றால், இது போதுமானதாக இருக்க வேண்டும். [3]ஆறு நாட்களுக்கு முன்பு என்ன நடந்திருந்தது என்பது பற்றிய ஆய்வை விரிவாக்க நீங்கள் விரும்பலாம். [4]எடுத்துக்காட்டாக, பேதுரு தமது நடத்துவத்தில் பக்குவம் அடைவது அவசிய மாயிருந்தது, மற்றும் யாக்கோபு ரத்த சாட்சியாக மரிப்பதற்குத் தயாராயிருக்க வேண்டியிருந்தது (அப். 12:2). [5]பேதுரு அதை "பரிசுத்த பருவதம்" என்று மாத்திரம் அழைத்திருந்தார் (2 பேது. 1:18). [6]இந்தப் புத்தகத்தில் உள்ள வரைபடத்தைக் காணவும். [7]*Gordon Powell, *Difficult Sayings of Jesus* (N.p.: Fleming H. Revell Co., 1962), 63. [8]*கூட்டுப் புழு ஒன்று வண்ணத்துப் பூச்சியாகும் உருமாற்றத்தைப் பற்றி நினைத்துப் பாருங்கள். வில் எட் வார்ரென் அவர்கள், "உள்ளான மற்றும் ஆவிக்குரிய நிலைமாற்றத்தைக் குறிப்பதற்கு இவ்வார்த்தை [புதிய ஏற்பாட்டில்] இன்னும் இரு இடங்களில் (2 கொரி. 3:18; ரோமர் 12:2) பயன்படுத்தப்பட்டுள்ளது" என்று எழுதினார்* (Will Ed Warren, Class Syllabus, The Life of Christ: The Synoptic Gospels, Harding University, 1991, 71). [9]*ஆடைகள் வெளுமையாகத் தோன்றுவதற்குப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள் மற்றும் நீலம் ஆகியவற்றை நினைத்துப் பாருங்கள். [10]அவ்வப்போது, மனிதர்கள் அவரது மகிமை மற்றும் தெய்வீகத்துவம் ஆகியவற்றின் சிறு ஒளிக்கற்றைகளைப் பெற்றிருக்கலாம். இது, அவர் தேவாலயத்தை இருமுறை சுத்திகரித்தபோது எவரொருவரும் அவரைத் தடுத்திராதது ஏன் என்பதையும் அவரைக் கொல்ல முயன்ற கும்பலின் மத்தியிலிருந்து தீங்கெதுவும் இன்றி அவர் கடந்து செல்ல முடிந்தது எவ்வாறு என்பதையும் விளக்குவதற்கு உதவியாக இருக்கும். ஆயினும், பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரைத் தவிர வேறு எவரும் அவரது மகிமையின் முழுமையைக் காண அனுமதிக்கப்*

பட்டிருந்தது இல்லை.

[11]KJVயில் "எலியா" என்ற எபிரெயப் பெயரின் கிரேக்க வடிவமான "Elias" என்றுள்ளது. (பல பெயர்கள் மாறுபட்ட மொழிகளில் மாறுபட்ட வடிவங்களைக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, யோவான் ["John"] என்ற பெயர் Juan, Ian, Jan என்பது போன்ற மாறுபாடுகளைக் கொண்டுள்ளது.) இது சற்றே குழப்ப மூட்டுவதாக இருப்பதால், பெரும்பாலான மொழிபெயர்ப்பாளர்கள் அதிகம் பழக்கமான "எலியா" என்ற வடிவத்தையே பயன்படுத்துகின்றார்கள். [12]மோசேயும் எலியாவும் யார் என்பதைப் பேதுருவும் மற்றவர்களும் எவ்வாறு அறிந்தார்கள்? ஒருவேளை அவர்கள், தெய்வீக உட்கண்ணோக்கைப் பெற்றிருக்கலாம். ஒருவேளை அவர்கள், இயேசு அவ்விருவரையும் பெயர் சொல்லி அழைத்ததைக் கேட்டிருக்கலாம். வேத பாடப்பகுதி இதைப் பற்றி ஒன்றும் கூறுவதில்லை. மரணத்திற்குப் பின்பும்கூட மோசே மோசேயாகவே இருந்தார் மற்றும் எலியா எலியாவாகவே இருந்தார், மற்றும் அவர்கள் (ஏதோ ஒரு வகையில்) அடையாளம் கண்டுகொள்ளப்படக் கூடியவர்களாக இருந்தார்கள் என்பது ஆர்வத்திற்குரிய பக்கக் குறிப்பாக உள்ளது. இது நம்மிடத்தில், "பரலோகத்தில் நாம் ஒருவர் மற்றவரை அறிவோமா?" என்று அடிக்கடி கேட்கப்படுகிற கேள்விக்குப் பதில் அளிக்க உதவுகிறது. "ஆம்" என்றே வேதாகமம் பதில் அளிக்கிறது. [13]அவர்களின் வாழ்வில் நடந்த முக்கிய சம்பவங்களைத் தருவதற்கு நீங்கள் நேரம் எடுத்துக்கொள்ள விரும்பலாம். [14]மோசே நியாயப்பிரமாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தியிருந்தார் மற்றும் எலியா தீர்க்கதரிசிகளைப் பிரதிநிதித்துவப் படுத்தியிருந்தார் - இவ்விரண்டும் இயேசுவின் தெய்வீகத்துவத்திற்கு மாபெரும் சாட்சிகளாய் உள்ளன (யோவா. 1:45; லூக். 24:44ஐக் காணவும்) - என்பதே இவ்விருவரும் தேர்ந்துகொள்ளப்படக் காரணமாயிருந்தது என்று பலர் யூகிக்கின்றார்கள். இயேசுவின் வாழ்வுடன் உள்ள சாத்தியமான மற்ற பிணைப்புகள் பின்வருமாறு: இம்மூவரும் குறிப்பிடத்தக்க மலை உச்சி அனுபவம் கொண்டிருந்தார்கள்; இம்மூவரின் வாழ்வு முடிவுமே வழக்கத்திற்கு மாறானதாக இருந்தன (மோசேயைப் பற்றி, உபா. 34:6ல் காணவும்; எலியாவைப் பற்றி 2 இரா. 2:11ல் காணவும்). [15]அப்படிப்பட்ட உரையாடல் எதுவும் நடந்திருந்தால், அது எவ்வாறு நடந்திருக்கும் என்பதை நான் கற்பனை செய்ய முடிகிறது: "இயேசு, 'மெதுவாகக் கற்கும் எனது சீஷர்களைக் குறித்து நான் உங்களுக்குக் கூறுகின்றேன்' என்று சொன்னார். மோசே, 'கடின இருதயமுள்ள இஸ்ரவேல் மக்களைப் பற்றி நான் உங்களுக்குக் கூறுகின்றேன்!' என்று சொன்னார். எலியா, 'அதெல்லாம் ஒன்று மில்லை! ஆகாப் மற்றும் யேசபேல் ஆகியோரைப் பற்றி நான் உங்களுக்குக் கூறுகின்றேன்!' என்று சொன்னார்." [16]KJVயில் "decease" என்றுள்ளது. [17]இதற்கான கிரேக்க வார்த்தை exodon என்பதாகும், இது exodos என்பதன் accusative வடிவமாக உள்ளது. பிற்பாடு பேதுரு தமது சொந்த மரணத்தைக் குறிப்பதற்கு இதே வார்த்தையைப் பயன்படுத்தினார் (2 பேது. 1:15). [18]பின்வரும் விவரிப்பு சிலவேளைகளில் பயன்படுத்தப்படுகிறது: சத்திரத்துக்காரனிடம் பணத்தைக் கொடுத்த நல்ல சமாரியன், "நீ இவனை [காயம் அடைந்த மனிதனை] விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பி வரும்போது, அதை உனக்குத் தருவேன்" என்று கூறினான் (லூக். 10:35). காயப்பட்ட மனிதன் குணமாகி புறப்படத் தயாரானபோது, கடனைப் பற்றி விசாரித்திருந்தால், சத்திரத்துக்காரன் "அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம், அது தரப்பட்டாயிற்று" என்பது போன்று கூறியிருப்பான். ஆயினும் அந்தக் கடனானது, சமாரியன் திரும்பி வருகையில் அதைச் செலுத்தித் தீர்ப்பான் என்ற முன்னெதிர்பார்ப்பிலேயே தீர்க்கப்பட்டிருந்தது. [19]நான் பேதுருவுடன் [என்னை]

அடையாளப்படுத்திக் கொள்ள முடியும். மக்கள் தாங்கள் கூறுவது என்ன என்பதைக் கவனமாய்ச் சிந்தித்துப் பார்க்காமலேயே அடிக்கடி பேசுகின்றார்கள். அமெரிக்காவில் நாங்கள் சிலவேளைகளில், "திறந்த வாய், திணிக்கப்பட்ட பாதம்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவதுண்டு. [20]''கூடாரங்கள்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது கூடாரங்களின் பண்டிகை ஆசரிப்பின் ஒரு பாகமாக யூதர்கள் கட்டிய தற்காலிக இல்லிடங்கள் போன்ற அமைப்புகளைக் குறிக்கிறது. நான் ஒரு பையனாக இருந்தபோது, உலகில் நான் வாழ்ந்த பகுதியில், இப்படிப்பட்ட இல்லிடங்கள் "brush arbors" என்று அழைக்கப்பட்டன. நீங்கள் வாழும் இடத்தில் அர்த்தம் கொண்டுள்ள ஒரு சொற்றொடரைப் பயன்படுத்துங்கள் ("குச்சு" அல்லது "தகரக் கொட்டகை" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தலாம்).

[21]கூடாரப் பண்டிகைக்கான காலம் சமீபமாய் இருந்ததால் (யோவா. 7:2), அவர்கள் அந்தப் பண்டிகையை எருசலேமிற்குப் பதிலாக அந்த மலைப் பகுதியிலேயே ஆசரிக்கலாம் என்று பேதுரு கருத்துத் தெரிவித்ததாகச் சில எழுத்தாளர்கள் நினைக்கின்றார்கள். [22]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 419. [23]கிழக்கு நாடுகளின் மதங்கள் சிலவற்றின் உறுப்பினர்கள் இயேசுவை ஆவிக்குரிய தலைவர்கள் பலரில் ஒருவராக ஏற்றுக்கொள்ள மிகவும் மனவிருப்பமாக உள்ளனர், ஆனால் அவர்கள் அவரை, ஆண்டவராகவும் தேவனாகவும் ஏற்றுக் கொள்ள மனவிருப்பம் இல்லாமல் இருக்கின்றார்கள். கிறிஸ்தவர்கள் என்று தங்களை உரிமைகோரிக் கொள்பவர்கள் கூட, இயேசுவைப் பற்றிய இவ்விதமான மதிப்பீடுகளுடன் துரதிர்ஷ்டவசமாக ஒட்டிச் செல்லுகின்றார்கள். நீங்கள் வாழும் பகுதியில் உள்ள மதச் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் நடைமுறைப் பயன்பாட்டை மேற்கொள்ளவும். [24]நியாயப்பிரமாணத்திற்குப் பதில் இயேசுவின் புதிய உடன்படிக்கை இடம்பெறுதலானது செயல்முறைப் படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது (கொலோ. 2:14; எபி. 9:16, 17); "இந்தக் கடைசி நாட்களில் [தேவன்] குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்" (எபி. 1:2அ). [25]இந்த வாக்கியத்தின் கடைசிப் பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள பேச்சின் உருவகமானது ஒரு (jigsaw puzzle) ஜிக்சா புதிரைக் குறிக்கிறது. உங்கள் உரையைக் கவனிப்பவர்களுக்கு இவ்வுருவகம் பழக்கமற்றதாக இருந்தால், நீங்கள் "மற்றும் ஆழமான அர்த்தத்தைத் தெளிவாக்கும்" என்று கூறலாம்.